**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி</u>**

**அசல் வழக்கு எண்.** 46/20

**வாக்குமூலம்.வா.சா.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சாமிநாதன் | தொழில் | |
| த/பெ. | நீலமேகம் என்கிற கருப்பையா | வயது | 45/ 2025 |
| கிராமம் | | | |
| தாலுகா | | | |

1873–ம் வருடத்து 10–ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 14.07.2025ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

9. என் தகப்பனாரின் கிரையம் முன்னவருக்கு கிரைய சொத்து பூர்வீக பாத்தியப்பட்ட சொத்தா என்றால் அது தெரியாது ஆனால் அந்த சொத்து அவர்கள் அனுபவத்தில் இருந்தது. வா.சா.ஆ.14 ஆவணத்தில் எனக்கு பூர்வீக சொந்தமானது என்று கண்டு தான் கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு கிரையம் கொடுத்த அனைத்து ஆவணங்களிலும் பூர்வீக சொந்தமானது என்று கண்டு தான் கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னுடைய வழக்குரையில் ராமகிருஷ்ணன் மனைவி தைலம்மாளுக்கு சொந்தமான இடம் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் பூர்வீக சொத்து என்ற வாசகம் வரவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.14 ஆவணத்தில் நத்தம் மனைப்பட்ட வழங்கப்பட்டு என்ற வாசகம் காணப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.14 கிரைய ஆவணத்தில் இலவச ஒப்படை வழங்கப்பட்டதாக வாசகம் காணப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

10. வா.சா.ஆ.14 ல் இணைக்கப்பட்டுள்ள மனைப்பட்டா தான் நான் குறிப்பிடும் மனைப்பட்டாவா என்றால் ஆமாம். வா.சா.ஆ.14 ஆவணத்துடன் நிலஒப்படை பட்டா நகல் தாக்கல் செய்துவிட்டு கிரைய ஆவணத்தில் நத்தம் பட்டா என்று பிரித்து கிரையம் செய்துயிருக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி ஒப்படைப்பட்டாவில் உள்ள நிபந்தனைகளை படித்துப்பார்த்துள்ளேன். வா.சா.ஆ.14 உடன் இணைக்கப்பட்டுள்ள நிலஒப்படை ஆவணத்தில் கண்டுள்ள பெயர் ராமையா தேவர் மகன் செல்வம் என்கிற கருப்பையா ஆகும். மேற்படி நிலஒப்படை ஆவணத்தில் ராமையா தேவர் தந்தை பெயர் நாராயண தேவர் என்று தான் உள்ளது என்றாலும் ராமையா தேவர் மகன் செல்வம் என்கிற கருப்பையா பெயர் இல்லை என்றால் அவருடைய மகன் தான் செல்வம் என்கிற கருப்பையா வா.சா.ஆ.14ஆவணத்துடன் ராமையா தேவர் தந்தை பெயர் நாராயண தேவரின் இறப்பு சான்றிதழ் வாரிசு சான்றிதழ் இணைக்கப்படவில்லை.

11. வா.சா.ஆ.14 ஆவணத்தில் என் தந்தைக்கு நிலஒப்படை வழங்கப்பட்டு வாரிசு முறையில் எனக்கு கிடைத்த சொத்து என்ற வாசகம் காணப்பட்டுள்ளதா என்றால்

இல்லை. எனவே ராமன் என்கிற கருப்பையாவிற்கு வழங்கிய பட்டாவின் அடிப்படையில் வா.சா.ஆ.14 ஆவணம் மோசடியாக ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.14 உடன் இணைக்கப்பட்டுள்ள செல்வம் என்கிற கருப்பையா குடும்ப அட்டையில் அவருக்கு மஞ்சக்கரை கிராமம் பெருங்காடு என்ற முகவரி உள்ளதா என்றால் சரிதான். ராமையா தேவருக்கும் மஞ்சக்கரை கிராமம் என்றால் சரிதான். நிலஒப்படை பட்டாவில் கோவில் வயல் கிராமம் என்று உள்ளதா என்றால் சரிதான். மஞ்சக்கரைக்கு கோவில்வயல் வருவாய் கிராமம் தான். கோவில்வயல் கிராமமும் மஞ்சக்கரை கிராமமும் வேறுவேறு என்றால் சரியல்ல. கோவில்வயல் வருவாய் கிராமம் மஞ்சக்கரை குக்கிராமம் சொத்து விபரம் கூத்தங்குடி கிராமம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கோவில்வயல் வருவாய் கிராமத்திற்கு உட்பட்ட கூத்தங்குடி கிராமத்தில் ராமையா தேவர் தந்தை பெயர் நாராயண தேவர் குடியிருந்ததற்கு ஆவணம் தாக்கல் செய்யமுடியுமா என்றால் ராமையாதேவர் கூத்தங்குடி கிராமத்தில் குடியிருந்தது இல்லை.

12. மேற்படி நிலஒப்படைப்பட்டாவில் நான்கெல்லை குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் வா.சா.ஆ.14 உடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணத்தில் இருக்கிறதா என்று தெரியவில்லை. என் கைவசகம் புலவரைபடம் இருக்கிறது. நான் வேண்டும் என்றே தெரியவில்லை என்று கைவசம் உள்ள வரைபடம் இருப்பதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ–14 கிரைய ஆவணத்தில் நான்கெல்லை குறிப்பிடப்பட்டுள்ளது. எந்த இடத்தில் நான்கெல்லை போடப்பட்டுள்ளது என்றால் என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் நான்கெல்லை காட்டப்படவில்லை. வா.சா.ஆ.14 ஆவணத்திலும் கிரையம் முன்னவர்களின் ஆவணத்திலும் நான்கெல்லை போடப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் எந்த வருடம் செட்டில்மெண்ட் பட்டா வழங்கப்பட்டது என்றால் 1958 ஆகும். 1990–1991 வரை தாவா கிராமத்தில் நத்தம் பட்டா ஏற்பட்டது என்றால் சரிதான். தாவா வழக்கில் என் தகப்பனாரின் கிரைய முன்னவர்கள் வைத்து இருந்த ஆவணம் எதுவும் தாக்கல் செய்துயிருக்கிறேனா என்றால் இல்லை.

13. 1992ல் இருந்து 2000 வரை ஏற்பட்ட நத்தம் நிலவரி செலுத்தப்பட்டதற்கான ரசீது தாக்கல் செய்யமுடியுமா என்றால் ஆவணங்களை பார்க்கவேண்டும். நான் அவ்வாறு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் தேடிப்பார்க்கவேண்டும் என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. நிலஒப்படை ஒப்பந்தப்படி ஒரு வருடத்திற்குள் கிரைய முன்னவர்கள் வீடு கட்டியதற்கான வீட்டு வரி ரசீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1999க்குள் வீடு கட்டியதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யமுடியுமா என்றால் இல்லை. ஒப்படை சொத்தை கிரையம் வாங்க வருவாய் துரையிடம் அனுமதி வாங்கியிருக்கிறேனா என்றால் அனுமதி வாங்கவேண்டும் என்றால் குறிப்பிட்ட காலத்திற்கு பிறகு கிரையம் வாங்கினால் அனுமதி வாங்கவேண்டிய அவசியம் இல்லை.

14. வருவாய் கோட்டாட்சியரிடம் இருந்து 33 செண்ட் வரை பட்டா வழங்க அனுமதி தரஅதிகாரம் இல்லை என்றாலும் நான் பிரதிவாதிகளின் அனுபவ சொத்தை அபகரிக்க மோசடியாக கிரைய ஆவணங்கள் உற்பத்தி செய்து இருக்கிறோம் என்றால் சரியல்ல. தாவா 10 அயிட்ட சொத்துக்களில் தென்புரம் வாதி பிரதிவாதிகளுக்கு சொந்தமானது என்றாலும் அதில் பிரதிவாதிகள் அகிரமித்து வீடு கட்டியதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. தாவா சொத்தின் கீழ்புரத்தில் பிரதிவாதிகள் தலா சரிபாதியாகவும் மேல்புரத்தில் நானும் அனுபவம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. நத்தம் செட்டில்மெண்ட்

தூயசிட்டா அடங்களில் ஒப்படை பெற்ற 10 ஆண்டுகளில் எந்த பதிவும் இல்லை என்றால் சரியல்ல.

15. என் தகப்பனார் கிரையம் பெற்ற கிரைய முன்னவர்களின் பாத்திய இடத்தின் விஸ்தீர்ணம் நீளஅகலம் சொல்லமுடியுமா என்றால் புலவரைபடத்தை பார்த்தால் தான் சொல்ல முடியும். என் தகப்பனாரின் கிரைய முன்னவர்கள் எந்த எந்த நீளஅகலப்படி அனுபவம் செய்து வந்தார்கள் என்று சொல்லமுடியுமா என்றால் புலவரைபடத்தை பார்த்து தான் சொல்லமுடியும். அசல் புல வரைபடத்தில் தாக்கல் செய்யாதற்கு காரணம் தாவா சொத்தின் கீழ்புர பகுதியை பிரதிவாதிகளிடம் இருந்து அபகரிப்பதற்காக என்றால் சரியல்ல. தாவா 10 அயிட்ட சொத்துக்களின் நிலஒப்படையையும் புலவரைபடத்தையும் பரிசீலித்தலே ஸ்தலத்தில் அனுபவம் இல்லாமல் ஆவண ரீதியாக பட்டா கொடுத்து இருக்கிறார்கள் என்பது தெரியும் என்றால் சரியல்ல. எனது கிரைய முன்னோர்கள் நிலச்சுவந்தார்கள் என்றாலும் என்னுடைய செல்வாக்கை பயன்படுத்தி நிலஒப்படை பெற்று தகப்பனார் பெயரில் கிரையம் வாங்கியிருக்கிறேன் என்றால் சரியல்ல. எனது கிரைய முன்னவர்கள் எவருமே தாவா கிராமத்தை பூர்வீகமாக கொண்டவர்கள் இல்லை என்றால் சரியல்ல.

16. வழக்குரையில் இலவச ஒப்படைப்பட்ட வழங்கப்பட்டு எவ்வளவு காலம் அனுபவித்தார்கள் என்ற விபரம் சொல்லப்படாததல் நான் தூய்மையான கரங்களுடன் நீதிமன்றதத்தை அனுகவில்லை என்றால் சரியல்ல. எனது கிரைய முன்னவர்கள் தாவா 10 அயிட்ட சொத்துக்களை கிரைய முன்னவர்கள் எந்தெந்த புல எண்ணை எந்தெந்த நான்கெல்லைக்கு உட்பட்டு யார் யார் அனுபவம் செய்தார்கள் என்ற விபரம் நான் சொல்லவில்லை என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. என்னுடைய முதல் விசாரணையில் யார் எந்தெந்த சொத்தை அனுபவம் செய்துவந்தாகள் என்று தெரியாது என்று சொல்லியிருப்பதால் வழங்குரையில் ஸ்தலத்தில் உள்ள அனுபவப்படி தாயார் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. செல்வம் என்கிற கருப்பையாவிடம் என் தகப்பனார் இரண்டு கிரைய மூலம் 2 ஏர்ஸ் கிரையம் வாங்கியிருக்கிறார் என்றால் சரிதான். அவரது தகப்பனாருக்கு உரிய பாகத்தையும் கொண்டு கிரையம் எழுதிக்கொடுத்துள்ளார். மேற்படி விபரங்கள் கிரைய ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல.

17. சந்திரன் என்கிற நாராயணனிடம் 2 கிரையங்கள் மூலம் 2 ஏர்ஸ் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். ராமகிருஷ்ணன் மனைவி தைலம்மாள் வருமான வரி செலுத்துபவர் என்றால் சரியல்ல. சுசீலா, ராமகிருஷ்ணன் ஆகிய இருவரும் வசதி படைத்தவர்கள் என்றால் சரியல்ல. விசலாட்சி, நல்லக்கூத்தன், செல்வம் , மணி, சந்திரன் ஆகியோர் பெரு விவசாயிகள் வசதி படைத்தவர்கள் என்றால் சரியல்ல. ரமேஷ் தந்தை பெயர் கருப்பையா, செல்லத்துரை ஆகிய இருவரும் வெளிநாட்டில் சம்பாதிப்பவர்கள் என்பதால் வசதியானவர்கள் என்றால் சரியல்ல. மேற்படி நபர்கள் அனைவரும் ஒரே குடும்பத்தை சேர்ந்த என் உறவினர்கள் என்றாலும் நிலச்சுவந்தார்கள் என்பதால் ஒப்படை பெற தகுதியில்லாதவர்கள் என்றால் சரியல்ல. மேற்படி நபர்கள் ராமையாதேவரின் வாரிசுகள் என்றால் சரிதான். தாவா சொத்தின் கீழ்புர பகுதியை பிரதிவாதிகளிடம் இருந்து அபகரிக்க தாவா சொத்துக்கு சம்மந்தம் இல்லாமல் நிலஒப்படை ஆவணம் உற்பத்தி செய்துக்கொண்டு கிரையம் வாங்கியிருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்லும் வழக்குமூலம் தவறானது என்றாலும் உரிமைவிளம்பல் கேட்காததல் வழக்கு பரிகாரம் கிடைக்கத்தக்கது இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தின் கீழ்புர பகுதியை பொறுத்து

எனக்கு சம்மந்தம் இல்லை என்பதால் வழக்கு பரிகாரம் கிடைக்கத்தக்கது இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணையில்லை.